# தூத்துக்குடியில் 3-வது ஹிந்தி எதிர்ப்பு ஊர்வலமும் பொதுக் கூட்டமும்.

(சுமது நிருபர்)

தூத்துக்குடி, ஜூன் 3.

இன்று இந்நகர் ஷண்முகபுரத்திலிருந்து, சாயங்காலம் 5 மணிக்கு நகர் முக்கியஸ்தர்களாகிய தோழர் ஆ. பெரியகுமாரு நாடார், முனிசிபல் கவுன்சிலர் பி. வி. பொன்னுச்சாமி நாடார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் அண்டு பஞ்சாயத்துக் கோர்ட் தலைவர், இவர்களது தலைமையின்கீழ், ஓர்பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று புறப்பட்டு நகர்வலம் வந்து, ஷெ ஷண்முகபுரம், சுயமரியாதை வாலிப சங்கத்தின் முன்பாகவுள்ள, மைதானத்தில் இரவு 9 மணிக்கு பிரபல வழக்கறிஞரும் தமிழ் அபிமானியுமான தோழர் எம். ஏ. பெரும்படையான் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் பிரபல வழக்கறிஞர்களும், சைவப் பெரியார்கள் பலரும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது" தலைவர் அவர்களாலும், நகர் முக்கிய அட்வகேட்டும் தமிழன்னைக்காக சகலமும் தியாகம் செய்யும் பெருந்தகையுமாகிய, தோழர் இ. வென்னிமாலைப் பிள்ளை பி. ஏ. பி. எல். அவர்களாலும், ஹிந்தி நுழைப்பால் நற்றமிழுக்கும் தமிழர்களுக்கும் ஏற்படும் தொல்லைகளையும், ஆரம்பத்திலேயே ஹிந்தி பேயைக் கொன்று தமிழன்னையைக் காப்பாற்றுவதற்கு ஏற்பட்டுள்ள ஹிந்தி எதிர்ப்புப் போரில் தமிழனாய் பிறந்த ஒவ்வொருவனும் கட்சி வேற்றுமை அகற்றி ஒன்றுபட்டுழைக்க வேண்டுமென மிகவும் விரிவாயும் விளக்கமாயும் வீரமாயும் பேசியது மிகவும் ஊக்கம் கொடுத்துள்ளது. இத்தலைவர்களைப் பின்பற்றி தோழர்கள் எம். வைகுண்டம், டாக்டர், தமன், அக்னீஸ்வரன் ஆர். கே. பெருமாள், முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர். கடைசியாக ஹிந்தி எதிர்ப்புப் பேச்சே. தலைவர் அவர்களால், ஹிந்தி ஒழியவேண்டும் அல்லது நாங்கள் அழிதல் வேண்டுமென, சாகுமளவும் உண்ணாமை என்ற உறுதிகொண்டு, இன்றைக்கு 34 நாட்களாய் பட்டினிகிடக்கும் தமிழன்பர், தோழர் கே. என். ஸ்டாலின் ஜெகதீஸ் அவர்களையும், நடந்த 1-6-38-லிருந்து முதல் அமைச்சர் விடுதிமுன்பு பட்டினி கிடந்து கைது செய்யப்பட்டிருக்கும் தோழர் பல்லடம் பொன்னுசாமி இவர்களது வீரத்தியாகத்தை போற்றுவதாயும், கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. மேலும், ஹிந்தி எதிர்ப்புக்குத்தக்கது செய்யவும், எதிர்ப்புப் போர் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை இவ்வூருக்கு தருவிக்கவும், தோழர்கள், அக்னீஸ்வரன், ஆர். கே. பெருமாள் எஸ். நடராஜன், டி. பால்பாண்டியன், முதலியவர்களடங்கிய கமிட்டி ஒன்றும் நிறுவப் பெற்று கூட்டம் இனிது முடிந்தது. ஹிந்தியை ஒழிக்க புது மார்க்கட் பிரபல வியாபார வாலிபத் தோழர்கள் காட்டும் உற்சாகமும் ஒத்துழைப்பும் பெரிதும் போற்றத்தக்கதாகும்.

---

# சீன-ரஷ்ய இரகசிய ஒப்பந்தம்.

## யுத்த தளவாடங்களை ரஷ்யா சப்ளை செய்யும்.

## சோவியத் ராணுவ அதிகாரியை சீனா அமர்த்திக் கொள்ளும்.

## ஜப்பானுக்கு விரோதமாக பிரசாரம் நடத்தும்.

டோக்கியோ, ஜூன் 6.

மாஸ்கோவுக்கு ஜெனரல் ஸன் போ விஜயம் செய்ததன் பயனாக சீனாவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கும் இரகசியத்தில் ஒரு ஒப்பந்த மேற்பட்டிருப்பதாக ஜப்பானிய சர்க்கார் நியூஸ் ஏஜென்ஜி பிரகாரம் சம்பந்தகுந்த முறையில் ஒரு செய்தி வெளியாயிருக்கிறது.

சோவியத் ராணுவ நிர்வாக ஆலோசனையாளரை சீனா வேலைக்கமர்த்திக் கொள்ள வேண்டுமென்றும், ரஷ்யர்களின் கட்டளைக்கிணங்க சியாங்கேய் ஷேக்கின் நிர்வாக ஜப்பானியருக்குவிரோதமானபிரசாரத்தைநடத்த வேண்டுமென்றும், 2 யந்திர சாதனமுள்ள டிவிஷன்களையும், 72 ஆகாய விமானங்களையும், யுத்தத்தளவாடங்களையும் சீனாவுக்கு சோவியத் சர்க்கார் சப்ளை செய்ய வேண்டு மென்றும் ஒப்பந்தமேற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவ்வொப்பந்தத்தை அமலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமாக கீழ்க்கோடி செம்படையின் தளகர்த்தாரிருக்கும் மார்ஷல் புளுச்சர் மாஸ்கோவுக்குத் திருப்ப அழைக்கப்பட்டு விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

---

வதை நான்பலமாக ஆட்சேபிக்கிறேன்.

ஒரு வேளை, ஆங்கிலத்தை எடுத்துவிட்டால் வேண்டுமானால் இதைப்பற்றி யோசிக்கலாமென்று கருதுகிறேன்.

தாய் மொழிக்காக தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் அவர்கள் செய்யும்தியாகத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

இதுவரை, காங்கரஸ்காரர்கள் தான் சிறைக்குச் செல்வதாகக் கேள்விப்பட்டோம்.

ஆனால் இன்றோ தாய் மொழிக்காக சிறை செல்லவும், சாகும்வரை உண்ணாவிரதமிருக்கவும் பலர் துணிந்து விட்டார்கள்.

இந்தச் சமயத்தில் கனம் சி. ராஜகோபாலாச்சாரியார் கௌரவத்தைக் கருதாமல் எண்ணற்ற இளஞ்சிங்கங்களின் அருமையான உயிரைக்காக்கமுன் வர வேண்டுகிறேன்.

இல்லையேல் அவர் நமக்கும் நமது குலத்துக்கும் தீராப் பழியைத் தேடிக்கொள்வார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

தோழர் ஸ்டாலின் ஜெகதீசன் தனது முயற்சியில் வெற்றி பெறுவாராக.